# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


**<u>ஆணை நாள் 03.07.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு ரா.பிரியகுமார், B.Sc.,B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். NC-560/A/2024 [SA-22329/A/2022]</u>**

Thiru Jayaram Venkatesan -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் / பொது மேலாளர் (சந்தை) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தலைமை அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, கோயம்பேடு, சென்னை-600 107. -- பொது அதிகார அமைப்பு

# <u>ஆணை</u>

| | |
|---|---|
| மனுதாரர் / மேல்முறையீட்டாளர் | Thiru Jayaram Venkatesan ஆஜராகவில்லை. |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(1)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. | |
| பொது அதிகார அமைப்பு (பொதுத் தகவல் அலுவலரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி) | திரு P. ராஜவேல்<br>மேலாளர் (சட்டம்) நேரில் ஆஜரானார் |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 26.04.2022 |
| "*Provide the list of all tenders with reference number floated between 01.01.2019 till now for transportation/movement of PDS and special PDS commodities by the Tamil Nadu Civil Supplies Corporation"* என்பது போன்ற தகவல்களை 7 இனங்களில் கோரியுள்ளார். | |
| ஆணை நிறைவேற்றாமை மனு நாள் | 14.08.2024 |
| விசாரணை நாள் | 21.04.2025 |
| **<u>விசாரணையின் முடிவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு:</u>** | |
| "08.05.2024 தேதியிட்டு ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து Standing Council-இடம் கருத்துரு பெற்று, உடனடியாக சென்னை உயர்நீதிமன்றத்தில் Writ Petition தாக்கல் செய்து, ஆணையத்தின் முன் Memo file செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதால், அடுத்த விசாரணையை 03.07.2025 அன்று ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது. | |

| |
|---|
| அடுத்த விசாரணையின் போது மனுதாரர், பொது தகவல் அலுவலர் இருவரும் ஆணையத்தின் முன் ஆஜராக உத்தரவிடப்படுகிறது". |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலரின் பிரதிநிதி, 08.05.2024 தேதியிட்டு ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த 18.06.2024 அன்று W.P.No. 13446/2025 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அம்மனு மீதான வழக்கு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், NC-560/A/2024 வழக்கின் மனுதாரரான திரு ஜெயராம் வெங்கடேசன், மேற்படி சென்னை உயர்நீதிமன்ற வழக்கில் இரண்டாவது எதிர்மனுதாரராக இருப்பதால் அவருக்கும் Notice அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேற்படி W.P.No. 13446/2025 வழக்கு விரைவில் விசாரணைக்கு வரவிருப்பதாகவும், அவ்வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு அதன் விவரத்தினை ஆணையத்தின் முன் விரைவில் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.

3. **பொது தகவல் அலுவலரின் பிரதிநிதியின் வாதுரையை ஆணையம் ஏற்கிறது. எனவே இவ்வழக்கை அடுத்த மாதம் 07.08.2025 அன்று ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது. அடுத்த விசாரணையின் போது மனுதாரர், பொது தகவல் அலுவலர் இருவரும் ஆணையத்தின் முன் ஆஜராக உத்தரவிடப்படுகிறது. தனியாக அழைப்பாணைகள் அனுப்பப்பட மாட்டாது.**

**ஒம்/- (ரா.பிரியகுமார்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். NC-560/A/2024 [SA-22329/A/2022]**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட
வருவாய் அலுவலர் / பொது மேலாளர் (சந்தை)
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
தலைமை அலுவலகம்,
பூந்தமல்லி நெடுஞ்சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

**மனுதாரர்**
Thiru Jayaram Venkatesan,
Satua Plaza, #7, 2nd Floor,
Dr. Thirumoorthy Nagar Main Road,
Nungambakkam,
Chennai-600 034.
Copy to: File
PR/Sr.PS 07.07.2025